**SPECIAL TOPIC: EASTERN LITERATURE (biblical paradoxes)**

## சிறப்பு தலைப்பு: கிழக்கேத்திய இலக்கியம் (வேதாகம முரண்பாடுகள்)

A. இந்த உள்ளுணர்வானது (அதாவது, வேதாகமம் ஒரு கிழக்கேத்தயப் புத்தகம், ஒரு மேற்கத்திய புத்தகம் அல்ல) தனிப்பட்ட முறையில், வேதாகமத்தை தேவனுடைய வார்த்தையாக நேசிக்கும் மற்றும் விசுவாசிக்கும் நபராக எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. வேதாகமத்தை தீவிரமாக ஏற்றுக் கொள்ள முயற்சிக்கும் போது, வெவ்வேறு நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழிகளில் சத்தியத்தை வெளிப்படுத்துகின்றன, முறையான வழிகளில் அல்ல. ஒரு ஏவப்பட்ட வார்த்தை மற்றொரு ஏவப்பட்ட வார்த்தையை ரத்து செய்யவோ அல்லது குறை மதிப்பீடு செய்யவோ முடியாது! முழு வேதகமத்தையும் அறிந்து கொள்வதில் சத்தியம் வெளிப்படுகிறது (எல்லா வேதகாமப் பகுதிகளும் ஏவப்பட்டவை, சிலவற்றில் மட்டுமல்ல, ஒ.பா. 2 தீமோ. 3: 16-17), அல்லது ஒரு பந்தியை மேற்கோள் காட்டுவதிலும் அல்ல (நிரூபிக்கும் வசனங்கள்)

B. பெரும்பாலான வேதாகம சத்தியங்கள் (கிழக்கேத்தய இலக்கியம்) கிளைமொழிகளிலும் அல்லது முரண்பாடான ஜோடிககளிலும் வழங்கப்படுகின்றன (லூக்காவைத் தவிர புதிய ஏற்பாட்டு ஆசிரியர்கள், எபிரேய சிந்தனையாளர்கள், பொதுவான கிரேக்க மொழியில் எழுதினார்கள் என நினைவில் கொள்ள வேண்டும். ஞான இலக்கியம் மற்றும் கவிதை இலக்கியம் ஆகியவை இணைவாதங்களில் சத்தியத்தை முன்வைக்கின்றன. முரண்பாடுகள் போன்ற இணக்கமற்ற இணைவாதமாக செயல்படுகிறது. இந்த முறையான இணைவாதமானது இணையான பந்திகளைப் போல செயல்படுகிறது). எவ்வாறாயினும் இரண்டும் சமமான சத்தியம்! இந்த முரண்பாடுகள் நாம் விரும்பும், எளிமையான, மத பிரிவுகள் கொண்ட நிரூபிக்கப்பட்ட பாரம்பரியங்களுக்கு வேதனையளிக்கின்றன! பின்வருவனவற்றில் உண்மையானது எது?

1. முற்குறிப்பு எதிர் சுயாதீன மனித தெரிவு
2. விசுவாசியின் பாதுகாப்பு மற்றும் : உறுதியாய்த் தரித்திருத்தலின் தேவை (சிறப்பு தலைப்பு: : உறுதியாய்த் தரித்திருத்தலைப் பார்க்கவும்)
3. மூல பாவம் மற்றும் சுய விருப்பமான பாவம்
4. இயேசு தேவனாக, எதிர் இயேசு மனிதனா
5. இயேசு பிதாவுக்கு சமமானவர், எதிர் இயேசு பிதாவுக்கு அடிபணிந்தவர்
6. தேவனுடைய வார்த்தையாக வேதாகமம், எதிர் மனித எழுத்தாளருக்கு
7. பாவமற்ற தன்மை (பரிபூரணவாதம்,ஒ.பா. ரோமர் 6) எதிர் குறைவான பாவம்
8. ஆரம்ப உடனடி நீதிமானக்கப்படுத்தலுக்கும் பரிசுத்தமாக்குதலுக்கும், எதிர் படிப்படியான பரிசுத்தமாக்கப்படுதல் (சிறப்பு தலைப்பு: பரிசுத்தமாக்கப்படுதல் பார்க்கவும்)

9. விசுவாசத்தால் நீதிமனக்கப்படுத்தல் (ரோமர் 4) எதிர் கிரியைகளினால் உறுதிப்படுத்தப்பட்டு நீதிமானக்கப்படுத்தல் (ஒ.பா. யாக்கோபு 2: 14-26)
10. கிறிஸ்தவ சுதந்திரம் (ஒ.பா. ரோமர் 14: 1-23; 1 கொரி. 8: 1-13; 10: 23-33) எதிர் கிறிஸ்தவ பொறுப்பு (ஒ.பா. கலா. 5: 16-21; எபே. 4: 1)
11. தேவனின் எல்லைக்குட்படாதத் தன்மை எதிர் அவரது தூரமானவரல்ல தன்மை
12. தேவன் இறுதியில் அறியப்படாதவர் எதிர் வேதத்திலும் கிறிஸ்துவிலும் அறியப்படத்தக்கவர்.

**பவுலின் இரட்சிப்பைக் குறித்த பல உருவகங்கள்**

a. தத்தெடுத்தல்
b. பரிசுத்தமாக்கப்படுதல்
c. நீதிமானாக்கப்படுதல்
d. மீட்பு
e. மகிமைப்படுத்துதல்
f. முற்குறிப்பு
g. சீர்பொருந்துதல்

13. தேவனுடைய ராஜ்யம் தற்போதைய எதிர் எதிர்கால நிறைவுக்கு
14. தேவனின் பரிசாக மனந்திரும்புதல் (ஒ.பா. அப்போஸ்தலர் 11:18; ரோமர் 2: 4; 2 தீமோ. 2:25) எதிர் இரட்சிப்பின் கட்டாய பதிற்செயலாக மனந்திரும்புதல் ஒ.பா. மாற்கு 1:15; அப்போஸ்தலர் 20:21)
15. பழைய ஏற்பாடு நிரந்தரமானது எதிர் பழைய ஏற்பாடு நிறைவேறிற்று மற்றும் பூஜ்யமானது (ஒ.பா. மத் 5: 17-19 எதிராக மத். 5: 21-48; ரோமர் 7 எதிர் கலாத்தியர் 3)
16. விசுவாசிகள் ஊழியர்கள் / அடிமைகள் அல்லது பிள்ளைகள் / வாரிசுகள்

Copyright © 2014 Bible Lessons International